**தலைப்பு 336 - வணிக கப்பல்துறை செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 336 - வணிக கப்பல்துறை செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வணிக கப்பல்துறை செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வணிக கப்பல் துறை செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் செயலகத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் செயலகத்தில் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் மூலம் வணிக கப்பல்துறை செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ரூபா 21,000,000 பெறுமதியான 03 வாகனங்கள் 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டியின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளில் குறிப்பிட்டவாறு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | துறைமுகங்கள், கப்பத்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் மூலம் 2023 செப்தெம்பர் 21ஆந் திகதி 03 வாகனங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தும் வழங்கும் கட்டகைள் அனுப்பட்டிருந்தது 2024 சனவரி 31 ஆந் திகதியாகும். எனவே அது பின்னர் கணக்கேடுகளில் உள்ளடக்கப்படும். | 2023 ஆம் ஆண்டில் அச்சொத்துக்கள் நிறுவனத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனால் செயலகத்தின் இறுதிக் கணக்குகளுக்கு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரசாங்க கணக்குகள் திணைக்கத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 05/2023 ஆம் இலக்க 2023 நவம்பர் 30 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவை சுற்றறிக்கையின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 45,477,692 பெறுமதியுடனான யாழ்ப்பாணம் பாதைவழி செயற்திட்டம் மற்றும் யாழ்ப்பாணம் உப அலுவலகத்தின் நிதியற்ற சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயலகம் 2022 ஆம் ஆண்டிலிருந்து தனியான செலவுக் தலைப்பின் கீழ் பேணப்பட்டு வருவதுடன் நிலையான சொத்துக்கள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2023 சனவரி 18 ஆந் திகதி மாற்றப்பட்டது. அவ்வாறு உள்ளடக்கப்படாத சொத்துக்களை எதிர்காலத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகளின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களை கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்குவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 05/2023 ஆம் இலக்க கணக்குகள் வழிகாட்டி சுற்றறிக்கையின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள பின்னிணைப்பின் 2.1 ஆம் பிரிவிற்கு இணங்க காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுபபிவைக்கப்பட்டு ள்ளதுடன் பெறுமதியை பெற்றதன் பின்னர் கணக்குகளில் உள்ளடக்ககூடியதாக இருக்கும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## (ஆ) கட்டுநிதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| செயலகத்தின் 479/22 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கின் கீழ் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 39,670,090 இறுதி மீதி காணப்பட்ட போதிலும் 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதி கட்டுநிதி கணக்கு கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 479/22 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கின் கீழ் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உருவாகிய வித்தியாசம் 2023 சனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது திறைசேரி அச்சுப்பிரதியின் மூலம் செம்மையாக்கப்படுள் ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## (இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வணிக கப்பல்துறை செயலகத்தினால் கீழே தரப்படும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நட்டங்கள் சேதங்கள் பதிவேடு, விடுமுறைப் பதிவேடு மற்றும் செலவுப் பேரேட்டினை நாளதுவரையாக்கி பேணுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் செலவுப் பேரேட்டின் நிதி ஏற்பாடு மிகைத்திருக்கவில்லை என குறிப்பிடுகின்றேன். | நிதிப்பிமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பதிவேடுகளை நாளதுவரையாக்கி செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நட்டங்கள் சேதங்கள் பதிவேடு | நி.பி 110 | நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை |
| விடுமுறைப் பதிவேடு | நி.பி 190 | நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை |
| செலவுப் பேரேடு | பொது 138(A) | நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திறைசேரி செயலாளரின் 01/2023 ஆம் இலக்க 2023 சனவரி 27 ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கையின் 02(அ) பிரிவின் பிரகாரம் அரசாங்க நிதிகளை சிக்கனமாக பயன்படுத்துதல் மற்றும் அத்தியவசியமற்ற செலவுகளை முடியுமான அளவு குறைத்தல் செய்ய வேண்டிய போதிலும் செயலகத்தினால் 17 செலவு விடயங்களின் ரூபா 3,684,000 சேமிப்புக்களுக்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைப/23/0624/628/022-1 ஆம் இலக்க 2023-04-18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வணிக கப்பல்துறை செயலகத்தை புதிய கட்டிடத்திற்கு கொண்டு செல்லும் செலவுகள் 2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிற்குள் முகாமைத்துவம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததனால் சேமிப்புக்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. | அரசாங்க செலவுகளை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் உள்ள படிவத்திற்கு இணங்க 2023 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு மின்அஞ்சல் மூலம் சேமிப்புக்கள் சம்பந்தமான தகவல்கள் தெரியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் வணிக கப்பல்துறை செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த நிதி ஏற்பாட்டிற்குள் முகாமைத்துவம் செய்வதற்காக அமைப/23/0624/628/022-1 ஆம் இலக்க 2023-04-18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்திய செலவு மதிப்பீட்டினைத் தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பிதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செயலகத்தின் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது முறையான கவனத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் | 2023 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நிதிப்பிரச்சினை மற்றும் புதிய கட்டிடத்திற்கு அலுவலகத்தினை எடுத்துச் செல்ல வேண்டி ஏற்பட்டதனால் நிதி ஏற்பாட்டினை | நி.பி 50 இல் குறிப்பிட்ட முறைமையில் உரியவாறு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்லத் |

| | | | |
|---|---|---|---|
| | மிளாய்வாண்டில் 16 செலவு விடயங்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 29,970,000 மொகை ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்ததுடன் அது தொடக்க மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் 05 சதவீதத்திற்கும் 500 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | முகாமைத்துவம் செய்வதற்கு முடியாதிருந்தது. | வேண்டும். |
| (ii) | குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன (1404) செலவு விடயத்தின் கீழ் நி.பி 66/69 இன் கீழ் மாற்றம் செய்யப்பட்ட ரூபா 1,000,000 நிதி எற்பாட்டில் ரூபா 428,399 நிதி எற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது மாற்றம் செய்யப்பட்ட நிதி எற்பாட்டில் 42.83 சதவீதமாகும். | வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் சேவை நிபந்தனைகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாததனால் 2023 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான மாதாந்த வாடகையை செலுத்துதல் தாமதிக்கப்பட்டது. | குத்தகை வாடகைக்காக போதிய நிதி எற்பாடு செய்யப்பட வேண்டியதுடன் நி.பி 66/69 இன் கீழ் மாற்றப்பட்ட நிதி எற்பாட்டினை உரிய முறைப்படி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2023 ஆம் ஆண்டிற்கான தேறிய நிதி எற்பாட்டில் 02 மூலதன செலவு விடயங்களின் ரூபா 964,908 தொகையும் 04 மீண்டுவரும் செலவு விடயங்களின் ரூபா 138,160 தொகையும் ஆன ரூபா 1,103,068 மொத்த பெறுமதியான நிதி எற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 2/2023, 01/2023 மற்றும் 9/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் செலவு செய்தல் மட்டுப்படுத்தப்பட வேண்டியதனால் மேற்கூறிய செலவு விடயங்களில் சேமிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. | நி.பி இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டினை முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயலகத்தின் பாதீட்டில் 15 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,734,480 மிகையாக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மிகைக் செலவுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள செலவு விடயங்கள்காக மேலதிக நிதி ஏற்பாடு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் நிதி எற்பாடு கிடைக்காமையால் மேலே குறிப்பிட்டவாறு மிகையாக செலவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. | செலவுகளை முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 336-1-1-0-1703 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் மொழி ஆற்றலினை மேம்படுத்தும் குறிக்கோளில் பாதீட்டில் ரூபா 100,000 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 54,398 தொகை குறிக்கோளுக்கு புறம்பான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதி எற்பாடு போதாமையின் அடிப்படையில் 336-2-1-0-1703 செலவு விடயத்தின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாமைக்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | நிதி ஏற்பாட்டினை பாதீடு செய்யப்பட்ட மீதிக்காக மாத்திரம் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டி இருந்த ரூபா 10,639,275 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2024 மார்ச் 25 ஆந் திகதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 4,752,354 ஆக ரூபா 5,886,921 தொகை 10 செலவு விடயங்கள் தொடர்பாக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டிற்குரிய சில செலவுகளுக்காக 2024 ஆம் ஆண்டிலேயே விலைப்பட்டியல்கள் கிடைத்துள்ளன. | காலப்பகுதியின் கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் முறையாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வணிக கப்பல்துறை செயலகத்தின் பழைய கட்டிடம் உடைந்து விழுந்ததன் காரணமாக புதிய கட்டிடத்திற்கு அலுவலகத்தினை கொண்டு செல்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி ஏற்பாட்டிற்குள் செலவுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதி எற்பாடு காணப்படுமாயின் மாத்திரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் மேற்கூறிய பிரமாணங்களை கவனத்திற்கு | 2023 ஆம் ஆண்டின் போது எதிர்பாராத வகையில் வணிக கப்பல்துறை செயலகத்தின் கட்டிடம் உடைந்து விழுந்ததன் காரணமாக உடனடியாக புதிய அலுவலக கட்டிடத்திற்கு செல்ல வேண்டி ஏற்பட்டமையும் அத்தியவசியமான சேவைகளை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்காவும் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(1) இல் காட்டப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எடுத்துக்கொள்ளாது 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 9,938,532 நிதி ஏற்பாட்டினை மிகைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்புகள் | | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 1645 | வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களின் (பொது 267) மாதாந்த பொழிப்பு மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | WPKR - 5439, WPPJ - 8817 மற்றும் WPKS 2340 ஆம் இலக்க வாகனங்கள் 2023-09-21 ஆந் திகதி செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து சம்பவக் குறிப்பு புத்தகங்களில் உரிய தகவல்கள் பதிவுசெய்யப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பவ குறிப்பு புத்தகங்களை முறைப்படியாக நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | வருடாந்த பெறுகைத் திட்டத்தினை தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டம் ஒவ்வாரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பெறுகைத் திட்டத்தினைத் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசலாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்கு பின்னர் 12 மாத கால எல்லைக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இரண்டு குளாம் வாகனங்களுக்குரிய எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கு 2024 ஏப்ரல் 03 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் குழு அறிக்கை பெற்றுக்கொள்ளப் பட்ட உடன் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 3.3 ஆம் பந்தி | பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மாதாந்தம் கடமைக்காக மேற்கொள்ளப்படுகின்ற போக்குவரத்து சேவைக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | அறிவுறுத்தல்களுக்கு இணங்க 2024 மே மாதத்திலிருந்து போக்குவரத்து சேவை குறிப்பு பத்திரத்தினை முறைப்படியாக பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை எற்பாடுகளின் பிரகாரம் போக்குவரத்து சேவைக் குறிப்பினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 2018/02 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 | | மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரித்து உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | இதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரசைகள் சேவைநாடுனர் நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வணிக கப்பல்துறை செயலகத்தில் பிரசைகள்/ சேவைநாடுனர் நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கை எற்பாடுகளின் பிரகாரம் பிரசைகள் சேவைநாடுனர் நியதிச்சட்டத்தினை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் செயற்பணியும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தூர நோக்கு செயற்பணி மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் 03 ஆம் பந்திக்கு இணங்க 12 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஆண்டிற்காக அங்கீகரித்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் (Activity plan), அமுல்ப்படுத்தும் காலப்பகுதி (Time Line), வருமானத் தலைப்பிற்கான அங்கீகரித்த வருமானத்தை சேகரிக்கும் செயல்நடவடிக்கைத் திட்டம், அச்செயற்பாடுகளின் எதிர்பார்த்த பெறுபேறு/ விளைவுகள் (Output/Outcome) என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டிய போதிலும் அதற்கிணங்க முறைப்படியாக ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வணிக கப்பல்துறை செயலகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம், வருடாந்த வருமான மதிப்பீடு மற்றும் வருடாந்த கட்டுநிதித் திட்டம் என்பவற்றை எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அரசாங்க நிதி சுற்றிக்கை அறிவுறத்தல்களின் பிரகாரம் அங்கீகரித்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் முறைப்படியாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த ஆளணியினர், தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணியினர், வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடங்கியிருக்க வேண்டிய போதிலும் அந்த விடயங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிரகாலத்தில் இன்னும் நாளதுவரையாக்கி செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | அரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் உள்ளடக்க வேண்டிய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி முறைப்படியாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வணிக கப்பல்துறை செயலகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கையின் பிரகாரம் 12 பிரதான செயற்பாடுகள், 4 குறுங்கால திட்டங்கள், 03 நீண்டகால திட்டங்கள் என்பன எதிர்கால திட்டங்களாக காட்டப்பட்டிருந்தும் அப்பிரதான செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததன் காரணமாக செயலகத்தின் செயலாற்றலினைப் பரீட்சிக்க முடியாதுள்ளது. | வரைபு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்கிறேன். | வரைபு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளைப் போல நீண்டகால மற்றும் குறுங்கால திட்டங்களையும் உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வணிக கப்பல்துறை செயலகத்தின் மூலம் கொழும்பு 10, மருதானை வீதி இலக்கம் 79 எனும் இடத்தில் அமைந்துள்ள 06 மாடிக் கட்டிடம் 2023 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்த அடுத்துவரும் 05 ஆண்டுகளுக்கு மாதாந்தம் ரூபா 1,697,400 | வணிக கப்பல்துறை செயலகம் அமைந்துள்ள கட்டிடத்தில் காணப்படுகின்ற பாதுகாப்பின்மையினால் ஆகக் குறைந்த | செயலகம் பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பணத்திற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டியாக கேள்விகளைக் கோரி கட்டிடத்தினை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மறறும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க ஒரு ஆண்டு குத்தகை காலத்திற்கு உட்பட்டு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கட்டிடங்கள் 05 ஆண்டுகள் காலத்திற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | விலையினை சமர்ப்பித்திருந்த தெடிகம குரூப் கட்டிடத்தினை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு பெறுகைக்குழு தீர்மானித்திருந்ததுடன் அமைச்ரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் கட்டிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது. | எடுத்தல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் மகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| யாழ்ப்பாணம், ஊர்காவற்றுரையிலுள்ள வணிக கப்பல்துறை செயலகத்தின் உப அலுவலகம், சுற்றுலா விடுதி, வழுக்குப்பாதை செயற்திட்டம் என்பவற்றின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 79,279,747 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளக்காக ரூபா 3,466,187 தொகையான பராமரிப்புச் செலவுகள் மேற்கொள்ப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது அது விளைவற்ற ஒரு சொத்தாக மாயிறிருந்தது. | எதிர்பாராத 2020 ஆம் ஆண்டின் சூறாவளியின் காரணமாக பாதை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் அழிவடைந்துள்ளதுடன் பாதையை வெளித்தரப்பினர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதனால் எதிர்காலத்தில் அரசாங்கத்தின் நிதி எற்பாட்டின் மூலம் செலவு செய்தல் இடம்பெறமாட்டாது. | முறையான நடைமுறைக்கு இணங்க சொத்துக்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு செயலகத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களினால் பிணைவைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நி.பி 880 மற்றும் 01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையின் (ii) ஆம் பகுதியின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் செயலகத்தில் பிணைவைக்க வேண்டிய 09 உத்தியோகத்தர்கள் ரூபா 147,500 பிணைப் பணம் வைத்திருக்கவில்லை. | வணிக கப்பல்துறை செயலகத்தின் உத்தியோகத்ரத்கள் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பிணைக் கட்டளைக் சட்டத்தின் கீழ் பிணை வைப்பதற்காக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நி.பி 880 இல் குறிப்பிட்ட முறைமையில் நிர்ணயிக்கப்பட்ட பிணைவைத்தலினை மேற்கொள்வதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 நட்டங்கள் மற்றும் செதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் வழுக்குப்பாதை (Slipway) செயற்திட்டத்தின் பிரதான இயந்திரத்திற்கு 2020 ஆம் ஆண்டின் போது இயற்கையாக உருவாகிய புரவி எனப் பெயரிடப்பட்ட சூறாவளியின் காரணமாக ரூபா 2,088,808 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அந்த நட்டத்தை குறைப்பதற்காக உத்தரவாத காலம் மற்றும் நட்டங்கள் சேதங்கள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காததனால் ஒட்டுமொத்த நட்டத்தினையும் அரசாங்க தாங்கிகொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறே இது தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கும் போதியளவில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது இயற்கையாக உருவாகிய புரவி எனப் பெயரிடப்பட்ட சூறாவளியின் காரணமாக ஏற்பட்ட நட்டம் என்பதனால் நட்டங்கள் மற்றும் சேதங்களாக அடையாளங்காண முடியாது எனத் தெரிவிக்கிறேன். | நி.பி 104 இன் பிரகாரம் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாங்கண்டு தொடக்க மற்றும் முழுமையான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் சுற்றுலா விடுதி 2020 ஆம் ஆண்டிலிருந்து வேண்டிக்கொள்பவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு முறையான நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் அது ஒரு விளைவற்ற சொத்தாக மாறியிருந்ததுடன் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | துரிதமாக செயற்திட்டத்தினை வெளித்தரப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களை முறைப்படியாக முகாமைத்துவம் செய்து அதனை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாட்சி

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நி.பி 133(ஆ) மற்றும் DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றிக்கையின் பிரகாரம் அப்பொறுப்பு அமைச்சு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் முறைப்படியாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வணிக கப்பல் துறை செயலகத்தின் கணக்காய்வும் மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சு கணக்காய்வுப் பிரிவினால் செயலகத்தினை கணக்காய்வு செய்தல் பொருத்தமானது என அமைச்சு செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. | நி.பி 133 இன் பிரகாரம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

**கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள்**

(அ) **கணக்காய்வு அவதானிப்புக்கள்:** மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான ஆளணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன

| ஊழியர் வகை | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடமான எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 25 | 10 | 15 |
| மூன்றாம் மட்டம் | 04 | 01 | 03 |
| இரண்டாம் மட்டம் | 66 | 48 | 18 |
| ஆரம்ப மட்டம் | 30 | 14 | 16 |
| | 125 | 73 | 52 |

செயலகத்தின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையில் 60 சதவீதமும், ஆரம்ப மட்டத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையில் 53 சதவீதமும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்:** கப்பல் துறையில் தொழில்சார் நிறைவேற்றுப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களுக்குரிய அங்கீகாரத்தினைப் பெற்று தேசிய பத்தரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்தும் எவரும் அதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படிருக்கவில்லை. மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்பொழுது அரசாங்க நிருவாக அமைச்சிற்கு எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் தெரியப்படுத்தப்பட்டது.

**சிபாரிசுகள்:** மனிதவளங்களை சிறப்பாகவும் வினைத்திறனாகவும் பேணுவதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) **கணக்காய்வு அவதானிப்புக்கள்:** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட நடைமுறை விதிகளின் 34 ஆம் பந்தி மற்றும் 2022 திசெம்பர் 14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்:** 04 பதவிகளுக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் நாயகத்தின் பதவி அமைச்சரவையின் நியமனமாகும். ஏனைய

**சிபாரிசுகள்:** சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான ஆட்சேரப்பு நடைமுறையினைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு செயலகம்

| | | | |
|---|---|---|---|
| வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட நடைமுறை விதிகளின் 38 ஆம் பந்தியின் பிரகாரம் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலாக 07 பதவிகள் தொடர்பாக 11 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இரண்டு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரிக்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |